**சார்பு நீதிமன்றம், போளூர்**

**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, போளூர்,**

**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 06–ஆம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.2/2025 in O.S.No:201/2023_**

ராஜா ...மனுதாரர்/1ம் பிரதிவாதி

//எதிர்//

கோவிந்தராஜ் ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் 04.11.2025–ம் தேதியன்று முடிவாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/1ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.N.ரகுபதி அவர்களும், எதிர்மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.S.சதீஷ் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.

**ஆணையுரை**

இம்மனுவானது அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள Ex.A1 ஆவணத்திலுள்ள சாட்சியான மாசிலாமணியை மேற்படி வழக்கின் சாட்சியாக அழைத்து விசாரிக்க உத்தரவு பிறக்குமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர் ஆணையுறுதி வாக்குமூலத்தின் சுருக்கம்: –**

எதிர்மனுதாரர் அசல் வழக்கை மனுதாரருக்கு எதிராக 'ஆற்றதை ஏற்றுக' பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு அது விசாரணைக்கு வந்து வாதி PW1 ஆகவும், Ex.A1 கிரைய அக்ரிமெண்ட் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த வேலாயுதம் என்பவர் PW2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளர். கிரைய அக்ரிமெண்டில் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சியான மாசிலாமணியை வாதிகள் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. எனவே மாசிலாமணியை மேற்படி வழக்கில் சாட்சியாக விசாரித்தால் மேற்படி வழக்கு மனுதாரர் தரப்பில் ஜெயிக்க கூடிய அநேக அம்சங்கள் உள்ளது. அதனால் Ex.A1 ஆவணத்திலுள்ள சாட்சியான மாசிலாமணியை மேற்படி வழக்கில் நீதிமன்றத்தின் மூலம் சம்மன் அனுப்பி சாட்சியாக விசாரிக்க உத்தரவு பிறப்பிக்க இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

2. **எதிர்மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

இந்த மனுவில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளையும் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. வா.சா.ஆ.1ன் மற்றொரு சாட்சியான மாசிலாமணி என்பவர் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கும், அசல் வழக்கில் 2ம் பிரதிவாதிக்கும் நெருங்கிய

நண்பர் என்பதால் மாசிலாமணியை விசாரிக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்தது மட்டுமில்லாமல் உரிய காரணத்தை மனுவில் தெரிவிக்காமல் மேம்போக்காக விசாரிக்க வேண்டுமென்று கூறி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்ககூடியதல்ல. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

3. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 14 மற்றும் 151ன் கீழான இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

4. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஏதுவும் அளிக்கப்படவில்லை.

5. மேற்கண்ட இருதரப்பு வாதுரைகளையும், மனு ஆவணங்களையும், பரிசீலனை செய்ததில், மனுதாரர் Ex.A1 கிரைய அக்ரிமெண்ட் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள மாசிலாமணி என்பவரை நீதிமன்றத்தின் மூலம் சம்மன் அனுப்பி சாட்சியாக விசாரிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் மாசிலாமணி என்பவர் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கும், அசல் வழக்கில் 2ம் பிரதிவாதிக்கும் நெருங்கிய நண்பர் என்பதால் மாசிலாமணியை விசாரிக்க வேண்டுமென்று உரிய காரணத்தை மனுவில் தெரிவிக்காமல் மேம்போக்காக விசாரிக்க வேண்டுமென்று கூறி மனு தாக்கல் செய்திருப்பதாக தனது எதிருரையில் தெரிவித்திருந்தாலும், மேற்படி மாசிலாமணியை வழக்கின் சாட்சியாக விசாரிப்பது தனது வழக்கை நிரூபணம் செய்ய முக்கியமும் அவசியமானதாகும் என்று மனுதாரர் தெரிவித்துள்ளதை கருத்திற்கொண்டும், மேற்படி மாசிலாமணியை வழக்கின் சாட்சியாக விசாரித்தால் தான் வழக்கில் உண்மை நிலை தெரியவரும் என்பதோடு இருதரப்பினர்களுக்கிடைய உள்ள பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்ற நிலையில், இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே சட்டப்படியும் நியாயப்படியும் சரியானதாக இருக்கும் என இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, இம்மனுவை அனுமதித்து அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள Ex.A1 ஆவணத்திலுள்ள சாட்சியான மாசிலாமணியை மேற்படி வழக்கின் சாட்சியாக அழைத்து விசாரிக்க அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2025.11.06 16:38:06 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**